Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.37of 2021

Depositions of : PW4 (LW2)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேட்டு | தொழில் | : | – |
| தந்தை பெயர் | : | ரங்கசாமி | தற்போதைய முகவரி | : | பூசிமலை குப்பம், ஆரணி |
| வயது | : | 65 | மாவட்டம் | : | திருவண்ணமாலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை நான் பார்த்ததில்லை. சுமார் இன்றிலிருந்து 5 வருடங்களுக்கு ஒரு நாள் மாலை 6.00 மணியளவில் ஒயின் ஷாப்பிற்கு போவதற்காக அன்னனூர் பிரிட்ஜில் உட்கார்ந்திருந்த போது ஒரு ஆள் வந்து என் மகனை வெட்டி விட்டதாக சொன்னார்கள். நான் வந்து பார்ந்த போது இரண்டாவது தெருவில் இறந்து கிடந்தார். என் மகனை வெட்டி விட்டதாக கேள்விப்பட்டேன். யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்த போதும்மேற்கண்டவாறு தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் விசாரணையில் கடந்த 01.11.2020 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் நானும், என் மனைவியும் என் சம்மந்தியம்மாவும் அயப்பாக்கத்திற்கு கடைக்கு போய்விட்டு திரும்பிவந்துகொண்டிருந்த போது 8.00 மணியளவில் அம்பேத்கார் தெருவில் முருகேசனின் மாடிவீட்டு அருகே சத்தமாக இருந்தது என்றும் நாங்கள் அங்கு ஓடிய போது அந்த வீட்டு அருகே இருந்த ஆட்டோவில் இருந்து யாரோ அள்வரங்க சீக்கிரம் வந்திடுங்க என்று சொன்னார்கள் என்றும் நாங்கள் அருகில் போன போது சகாயம், சக்திவேல் மற்றும் இன்னோருவர் ஆட்டோவில் ஏறிகொண்டார்கள் என்றும், டொக்ளி என்பவரும் ஆட்டோவில் உட்டகார்ந்திருந்தான் என்றும் அனைவரும் ஆட்டோவை எடுத்து கொண்ட வேகமாக போய்விட்டார்கள் என்றும் கீழே எனது மகன் பாண்டியன் வெட்டுபட்டு கிடந்தார் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.37of 2021

Depositions of : PW5 (LW5)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரியா | தொழில் | : | கொத்தனார் வேலை |
| தந்தை பெயர் | : | டேவிட் | தற்போதைய முகவரி | : | எண்.20, உழைப்பாளி தெரு, அன்னை அஞ்சுகம் நகர், அயப்பாக்கம் |
| வயது | : | 31 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலைப்பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை நான் பார்த்ததில்லை. கடந்த 01.11.2020 அன்று மாலை 7.30 மணியளவில் நான் கடைக்கு போய்யிருந்தேன். அங்கிருந்தவர்கள் பாண்டி இறந்துவிட்டான் என்று சொன்னார்கள். பாண்டி எனது தங்கை கணவர் ஆவார். நான் பயந்து கொண்டு அம்மாவை கூப்பிடுவதற்காக வீட்டிற்கு போனேன். பிறகு ஜோதி ஸ்டோர் கடை பக்கத்தில் போய் பார்த்த போது பாண்டி இறந்து கிடந்தார். எனக்கும் மயக்கமாக வந்தது. சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர். அப்போதும் மேற்கண்டாவறு தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் விசாரணையில் கடந்த 01.11.2020 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் என் அம்மாவும், என் தங்கயின் மாமனார், மாமியாரும் கடைக்கு போனார்கள் என்றும் நான் 8.00 மணியளவில் அம்பேத்கர் தெருவில் இருக்கும் கடையில் மளிகை பொருட்கள் வாங்க வந்தபோது முருகேசனின் வீட்டு அருகே ஒரு ஆட்டோ வந்தது என்றும் அதில் இருந்து சகாதேவன் இறங்கி மாடி வீட்டு அருகே பைக்கில் உட்கார்ந்து கொண்டிருந்த எனது தங்கை கணவரை கத்தியால் நடு மண்டையில் வெட்டினான் என்றம் அவர் கீழே சாய்ந்துவிட்டார் என்றும் சக்திவேலும், சகாதேவனும், பட்டில் மணி என்கிற மணி என்பவரும் பாண்டியனை உடல் முழுவதும் வெட்டினார்கள் என்றும் எங்கள் ஏறியாவை சேர்ந்த டொக்ளி மணி ஆட்டோவில் உட்கார்ந்திருந்தாகவும் நான் அதை பார்த்து பயந்து கொண்டு என் தங்கையை கூப்பிட ஓடினேன் என்றும் அவர் அங்கு இல்லாததால் திரும்பி வந்த போது பாண்டி இறந்து கிடந்தார் என்றும் சொல்லிவிட்டு  தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.37of 2021

Depositions of : PW6 (LW6)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தொழில் | : | – |
| தந்தை பெயர் | : | சுப்புராயன் | தற்போதைய முகவரி | : | எண்.1, அம்பேத்கர் தெரு, அன்னை அஞ்சுகம் நகர், அயப்பாக்கம் |
| வயது | : | 65 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை நான் பார்த்ததில்லை. கடந்த 01.11.2020 அன்று மாலை 7.30 மணியளவில் நான் வெளியே போய்விட்டு வீட்டிற்கு வந்து டி.வி பார்த்துக்கொண்டிருந்தேன். வெளியே சத்தம் கேட்டு பார்த்த போது கூட்டமாக இருந்தார்கள். 8.00 மணியளவில் போலிசார் வந்து அங்கு ஒரு கொலை நடந்துவிட்டதாக சொல்லி என்னை விசாரித்தார்கள். எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் விசாரணையில் கடந்த 01.11.2020 அன்று இரவு சுமார் 8.00

மணியளவில் நான் என் வீட்டு வாசலில் உள்ள படிகட்டில் உட்கார்ந்திருந்த போது ஒரே சத்தமாக இருந்தது என்றும், அப்போது என் வீட்டு அருகே ஒரு ஆட்டோ வந்தது என்றும் அதில் இருந்து சகாதேவன் இறங்கி பைக்கில் உட்கார்ந்து கொண்டிருந்த பாண்டியனை கத்தியால் நடு மண்டையில் வெட்டினான் என்றும் அவர் கீழே சாய்ந்துவிட்டார் என்றும் சக்திவேலும், சகாதேவனும், பட்டில் மணி என்கிற மணி என்பவரும் பாண்டியனை உடல் முழுவதும் வெட்டினார்கள் என்றும் எங்கள் ஏறியாவை சேர்ந்த டொக்ளி மணி ஆட்டோவில் உட்கார்ந்திருந்தாகவும் நான் பயந்து கொண்டு வீட்டிற்குள்ளேயே இருந்துவிட்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாணை – இல்லை.